# தமிழ் சமுதாய வரலாறு , அது தொடர்பான தொல்லியல் கண்டுபிடிப்புகள்,சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறு

## தமிழ் நாட்டின் வரலாறு, மரபு, பண்பாடு மற்றும் சமூக - அரசியல் இயக்கங்கள்

Copy Right @ Best Learning Centre

First Edition January 2020

All Rights Reserved

## தமிழ் சமுதாய வரலாறு ,அது தொடர்பான தொல்லியல் கண்டுபிடிப்புகள்,சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறு

**அறிமுகம்:**

- கி.மு.(பொ.அ.மு) மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழ்ப் பண்பாடு தோன்றிவிட்டது.
- தமிழகத்து வணிகர்களும் கடலோடிகளும் கடல் கடந்து நாடுகளுடன் வணிகத் தொடர்புகளையும் பண்பாட்டுத் தொடர்புகளையும் கொண்டிருந்தனர்.
- வெளிநாட்டு வணிகர்கள் கடல்வழியே தமிழகத்திற்கு வந்துபோயினர்.
- வெளிநாட்டினருடன் ஏற்பட்ட பண்பாட்டுத் தொடர்புகளும்,வணிக நடவடிக்கைகளும்,தமிழகத்தின் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியும் வாழ்க்கைமுறைகளும் இணைந்து தமிழ்நாட்டில் முதல் நகரமயமாதல் உருவானது.
- தலைநகரங்களும் துறைமுகப்பட்டிணங்களும் தோன்றின.

**தொன்மைக்கால தமிழகர்களின் வரலாற்றை அறிவியல் பூர்வமாக மீட்டுருவாக்கம் செய்வதற்குப் பல வகையான சான்றுகள் உதவுகின்றன.**

அவையாவன:

1. செவ்வியல் தமிழ் இலக்கியங்கள்
2. கல்வெட்டுகள்
3. தொல்லியல் அகழாய்வுச் சான்றுகள் மற்றும் பண்பாட்டுப் பொருள்கள்
4. தமிழ் அல்லாத மாற்றும் அயல்நாட்டினரின் இலக்கியக் குறிப்புகள்

### ❖ செவ்வியல் தமிழ் இலக்கியங்கள்

தொல்காப்பியம் , பதினெண் மேல்கணக்கு நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெரும்காப்பியங்கள்.

- **பதினெண் மேல்கணக்கு நூல்கள் :**

  1. பத்துப்பாட்டு  2. எட்டுத்தொகை

- **ஐம்பெரும்காப்பியங்கள் :**

காப்பியங்கள் என்பவை கவிதை நயமுடைய செய்யுள் வடிவிலான நீண்ட இலக்கியப் படைப்புகளாகும். அவை :

1.சிலப்பதிகாரம்

2. மணிமேகலை

3. சீவகசிந்தாமணி

4. வளையாபதி

5. குண்டலகேசி

**சங்க காலம்**

- சங்ககாலம் அல்லது வரலாற்றுக் தொடக்க காலம் தென்னிந்திய வரலாற்றின் சிறப்புமிக்க காலமாகும்.
- இலக்கியங்கள்,தமிழ் பிராமி கல்வெட்டுகள் உள்ளிட்ட எழுத்துப்பூர்வமான சான்றுகள் கிடைத்துள்ளதால் சங்க காலம், வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் இருந்து மாறுபாட்டுச் சிறப்புடன் விளங்குகிறது.
- சங்க இலக்கியத் தொகுப்பு,அக்கால மக்களின் வாழ்க்கைமுறை குறித்தும் சமூக அமைப்பு குறித்தும் அறிய உதவுகின்றது.

**ஐந்திணை:** ஐந்து திணைகள் அல்லது ஐந்து வகை நிலப்பகுதிகள்.

- ஐந்திணை என்பது தமிழ்நாட்டின் ஐந்து வகையான நிலப்பகுதிகளைக் குறிக்கும்.
- ஒவ்வொரு திணைக்கும் தனியே கடவுள்,தொழில்,மக்கள்,பண்பாடு போன்றவை உண்டு.

ஐவகை நிலங்கள் : குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலை

- குறிஞ்சி - மலையும் மலைச் சார்ந்த பகுதிகளும்
- முல்லை - காடும் காடு சார்ந்த பகுதிகளும்
- மருதம் - வயலும் வயல்வெளி சார்ந்த பகுதிகளும்
- நெய்தல் - கடலும் கடல் சார்ந்த பகுதிகளும்

- பாலை - வறண்ட நிலப்பகுதி

**மூவேந்தர்:**

- **சங்க கால ஆட்சியாளர்கள் : சேர,சோழ,பாண்டியர்**
- அக்காலத்தைய பெரு நகரங்களும் துறைமுகப்பட்டிணங்களும் மூவேந்தரின் ஆளுகைக்குக் கீழேயே இருந்தன.

**நுண்கலைகள்:**

- சமய சடங்குகளின் போது நிகழ்த்தப்படும் ஆட்டங்களில் ஒரு வகைக்கு வெறியாட்டம் என்று பெயர்.செய்யுள் இயற்றல்,இசைக்கருவிகளை இசைத்தல் ,நடனமாடுதல் ஆகியவற்றைப் பலரும் அறிந்திருந்தனர்.
- சங்க காலத்து உணவு முறைகள் குறித்து இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது.
- மகளிர் தம் கண்களுக்கு மைதீட்டுவதற்குச் செம்பினால் ஆன மெல்லிய குச்சிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.இக்குச்சிகள் பல அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கண்ணுக்கு மைதீட்டும் மெல்லிய செம்பு குச்சி